StudentBounty.com

# GULF SAHODAYA(SAUDI CHAPTER) EXAMINATION 2013

## SUMMATIVE ASSESSMENT - II ( 2012-2013 )

**CLASS : IX**

**Maximum Marks : 90** | **TAMIL** | **Time : 3 hours**

மதிப்பெண்கள் : 90 | **தமிழ்** | நேரம் : 3 மணி

**Total Number of Pages: 14**

The question paper is diveded into four Sections.
இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | |
|---|---|---|---|
| SECTION | : A | Reading Comprehension | - 15 Marks |
| பிரிவு | : அ | படித்தல் (உரைநடைப்பகுதி ) | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : B | Writing | - 20 Marks |
| பிரிவு | : ஆ | எழுதுதல் | - 20 மதிப்பெண்கள் |
| SECTION | : C | Grammar | - 15 Marks |
| பிரிவு | : இ | இலக்கணம் | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : D | Literature / Textbooks | - 40 Marks |
| பிரிவு | : ஈ | இலக்கியம் / தமிழ்ப்பாடநூல்கள் | - 40 மதிப்பெண்கள் |

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

★ வினாத்தாள் 14 பக்கங்களைக் கொண்டது.

## பகுதி – I

**அ ) பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

இக்காலத்தில் தமிழ்நாட்டில் சிறந்து விளங்கும் நகரம் சென்னை மாநகரம். முந்நூறு ஆண்டுகட்கு முன்னே சென்னை ஒரு பட்டினமாகக் காணப்படவில்லை. கடற்கரையில் துறைமுகம் இல்லை. கோட்டையும் இல்லை. பெரும்பாலும் மேடு பள்ளமாகக் கிடந்தது அவ்விடம். இன்று சென்னையின் அங்கங்களாக விளங்கும் மயிலாப்பூரும், திருவல்லிக்கேணியும் கடற்கரைச் சிற்றூர்களாக அந்நாளில் காட்சியளித்தன. மயிலாப்பூரிலுள்ள கபாலீச்சுரம் என்னும் சிவாலயம் மிகப் பழைமை வாய்ந்தது. திருஞான சம்பந்தர் அதனைப் பாடியுள்ளார். திருமயிலைக்கு அருகேயுள்ள திருவல்லிக்கேணி, முதல் ஆழ்வார்களால் பாடப்பெற்றது. அவ்வூரின் பெயர் அல்லிக்கேணி என்பதாகும். அல்லிக்கேணி என்பது அல்லிக்குளம். அல்லி மலர்கள் அழகுற மலர்ந்து கண்ணினைக் கவர்ந்த கேணியின் அருகே எழுந்த ஊர் அல்லிக்கேணி என்று பெயர் பெற்றது. அங்கே பெருமாள் கோவில் கொண்டமையால் திரு என்னும் அடைமொழி சேர்ந்து திருவல்லிக்கேணியாயிற்று. திருவல்லிக்கேணிக்கு வடக்கே மேடும் பள்ளமுமாகப் பல இடங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று நரிமேடு. இன்று மண்ணடி என்று வழங்கும் இடம் ஒரு மேட்டின் அடியில் பெரும்பள்ளமாக அந்நாளிலே காணப்பட்டது.



...NAL INDIAN SC...
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**வினாக்கள்** 5 x 1 = 5

1 ) மயிலாப்பூரில் உள்ள சிவாலயம்

அ ) ஐராவதீசுவரர் ஆலயம்

ஆ) கபாலீச்சுரம்

இ ) சோமசுந்தரர் ஆலயம்

ஈ ) பிரகதீசுவரர் ஆலயம்

2 ) திருமயிலைக்கு அருகே அமைந்த ஊர்

அ ) திருவல்லிக்கேணி

ஆ) மயிலாப்பூர்

இ ) குளத்தூர்

ஈ ) திருநள்ளாறு

3 ) அல்லிக்கேணி என்பது

அ ) அல்லிக்குளம்

ஆ) அல்லி மலர்

இ ) அல்லி ராணி

ஈ ) தாமரை மலர்

4 ) அல்லிக்கேணி, திருவல்லிக்கேணியாக காரணமாக அமைந்த கோவில்

அ ) சிவன் கோவில்

ஆ) பெருமாள் கோவில்

இ ) முருகன் கோவில்

ஈ ) விநாயகர் கோவில்

5 ) ஒரு மேட்டின் அடியில் பெரும்பள்ளமாக அந்நாளில் காணப்பட்ட ஊர்

அ ) நரிமேடு

ஆ) மண்ணடி

இ ) மீனம்பாக்கம்

ஈ ) மாம்பலம்

ஆ) மனித இனம் மட்டுமே நகைச்சுவையை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றல் பெற்றிருக்கின்றது. உடலில் குருதி ஓட்டம் கூடுவதற்கும், மூளையில் புத்துணர்ச்சி ஏற்படுவதற்கும் நல்ல நகைச்சுவை துணைபுரிகிறது. நாம் நாள் தோறும் காணும் காட்சிகளும், கேட்கும் செய்திகளும், நிகழும் நிகழ்ச்சிகளும் நம்மையறியாமலேயே நகைக்க வைக்கின்றன. நகைச்சுவை நிகழ்ச்சிகள்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

நெடுநேரம் தங்காமல்,தோன்றி மறையும் தன்மை வாய்ந்தவை. ஆனால் இவை இலக்கியத்தில் இடம்பெறும்போது,நமக்கு மாறாத மகிழ்ச்சியை வழங்குகின்றன. கூத்துகளில் கோமாளிகளும், அரசவைகளில் விகடகவிகளும் நகைச்சுவைக்காகவே படைக்கப்பட்டார்கள். நகைச்சுவை உணர்வு ஒன்றுதான் மனிதர்களை, முழுமையானவர்களாக மாற்றும் ஆற்றல் கொண்டது. நகைக்கத் தெரியாதவர்கள் அரைமனிதர்களாகக் கருதப்படுவார்கள். பிறர் மனம் புண்படாத வகையில் நகைச்சுவை அமைதல் வேண்டும். உடல்நலத்திற்கும்,மனநலத்திற்கும்,எழுச்சிக்கும் நகைப்பு ஓர் அறிகுறி என மேனாட்டு அறிஞர்கள் கூறுவது சிந்தனைக்குரியது.

**விைாக்கள்** **5 x 1 = 5**

1 ) மூளையில் புத்துணர்ச்சி ஏற்படுவதற்குத் துணைபுரிவது

அ ) நகைச்சுவை

ஆ) உடற்பயிற்சி

இ ) விவாதம் செய்தல்

ஈ ) சோம்பியிருத்தல்

2 ) குருதி ஓட்டம் என்பது

அ ) இரத்த ஓட்டம்

ஆ) இரத்த அழுத்தம்

இ ) இரத்த சோகை

ஈ ) இரத்த தானம்

3 ) நகைச்சுவை நிகழ்ச்சிகள்

அ ) நெடுநேரம் தங்காமல்,தோன்றி மறையும் தன்மை வாய்ந்தவை.

ஆ) மனநிலை பாதிப்படையச் செய்யும் தன்மை வாய்ந்தவை

இ ) உடல்நிலையை மோசமாக்கும் தன்மை வாய்ந்தவை

ஈ ) அதிர்ச்சியை உருவாக்கும் தன்மை வாய்ந்தவை.

4 ) அரசவைகளில் நகைச்சுவைக்காகவே படைக்கப்பட்டவர்கள்

அ ) விகடகவிகள்

ஆ) கோமாளிகள்

இ ) கவிராயர்கள்

ஈ ) புலவர்கள்

5 ) நகைச்சுவை

அ ) பிறர் மனம் புண்படாத வகையில் அமைதல் வேண்டும்.

ஆ) பிறர் கேலி செய்யும் வகையில் அமைதல் வேண்டும்

இ ) பிறர் விருப்பம் அறியும் வகையில் அமைதல் வேண்டும்.

ஈ ) பிறர்க்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் அமைதல் வேண்டும்.



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

இ )	இனிமையாகக் குயில் கூவுவதைக் கேட்டிருப்பீர்கள்.காக்கையைப் போல் குயிலும் கறுப்பாக இருக்கும். ஆனால் காக்கையை விட குயில் உருவத்தில் சிறியது. குயிலின் அலகு கூரியதாயும், சற்று வளைந்தும் இருக்கும்.வால் நீளமானது.பெண் குயிலுக்கு மட்டும் உடலில் வெண்புள்ளிகளும்,சிறு வெள்ளைக் கோடுகளும் உண்டு. ஆண் குயில்தான் இனிமையாகக் கூவும்.பெண் குயிலுக்கு அவ்வாறு கூவத் தெரியாது.காடுகளிலும்,மரங்களிலும்,சோலைகளிலும் குயில் வாழ்கிறது.மரக்கிளைகளை விட்டுக் குயில் தரையில் இறங்காது.பழங்கள்,பூச்சிகள் முதலியவற்றை உண்ணும்.குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது.ஆதலால் காக்கையின் கூட்டில் காக்கைக்குத் தெரியாமல் முட்டையிடுவது வழக்கம். ஆண் குயிலைக் கண்டால் காக்கைகள் அதனைத் துரத்திச் செல்லும்.அச்சமயம் பார்த்துக் காக்கைக் கூட்டில் பெண்குயில் முட்டையிடும். அதே வேளையில் காக்கையின் முட்டை ஒன்றைத் தூக்கிச் சென்று அழித்து விடும். குயில் முட்டைக்கும், தன் முட்டைக்கும் வேறுபாடு தெரியாத காக்கை,எல்லா முட்டைகளையுமே அடைகாத்து வரும். குஞ்சு பொரித்த பிறகும் காக்கை குயில் குஞ்சுக்கு உணவு ஊட்டிவரும். பறப்பதற்குச் சக்தி பெற்றவுடன் குயில் குஞ்சு பறந்தோடிவிடும்.

<u>**வினாக்கள்**</u> **5 x 1 = 5**

1 ) **இனிமையாகக் கூவுவது**

அ) ஆண்குயில்

ஆ) பெண் குயில்

இ) கோழி

ஈ ) சேவல்

2 ) **பெண் குயிலின் உடலில்**

அ) கரும்புள்ளிகள் காணப்படும்

ஆ) கரிய கோடுகள் காணப்படும்

இ) வெண் புள்ளிகள் காணப்படும்

ஈ ) நீல நிறக் கோடுகள் காணப்படும்

3 ) **குயில் முட்டையிடுவது**

அ) கொக்கின் கூட்டில்

ஆ) காக்கையின் கூட்டில்

இ ) குருவியின் கூட்டில்

ஈ ) குயிலின் கூட்டில்

4 ) **ஆண்குயிலைக் கண்டால் காக்கைகள்**

அ) கூடி உண்ணும்

ஆ) ஆனந்தமடையும்

இ) துரத்திச்செல்லும்

ஈ ) பயந்து ஓடும்



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

5 ) குயில்கள் வாழும் இடங்களில் ஒன்று

அ) கடற்கரை

ஆ) பாலைவனம்

இ) குகைகள்

ஈ ) சோலை

## பகுதி – II

**1 x 8 = 8**

1 ) உன் பள்ளியில் நடந்த அனைத்துப் பள்ளி பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

( அல்லது )

குடியிருக்கும் பகுதியில் பொது நூலகம் அமைத்துத் தருமாறு பொது நூலகத்துறை இயக்குநருக்கு விண்ணப்பம் ஒன்று எழுதுக.

எக்கடிதமாயினும் உமது முகவரி,

கனிமொழியன் / கனிமொழி , பெருமாள் கோவில் தெரு, ஆலப்பாக்கம், சென்னை - 600 116.

**1 x 8 = 8**

2 ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் ஏதேனும் ஒன்றிற்குக் கட்டுரை எழுதுக.

அ) முன்னுரை - உயிரைக்காப்பது உடல் - உடற்பயிற்சி - உள நலம் - உடலோம்பும் உணவுகள் - நோயற்ற வாழ்வு - உடம்பார் அழியின் உயிரார் அழிவர் - வயதுக் கேற்ற உடற்பயிற்சி - முடிவுரை.

ஆ) முன்னுரை - கல்வியின் சிறப்பு - கற்றலுக்குரிய பருவம் - ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது - பசுமரத்தாணி போல் பதியும் - நினைவாற்றல் வளர்ச்சி - முடிவுரை.

இ ) முன்னுரை - ஈ.வெ.ரா.பெரியார் - தோற்றம் - வைக்கம் வீரர் - கள்ளுக்கடை மறியல் - தீண்டாமை ஒழிப்பு - பகுத்தறிவு பகலவன் - முடிவுரை.

3 ) வனவிலங்குப் பூங்கா திறப்புவிழா பற்றிய அறிக்கை ஒன்று எழுதுக. **1 x 4 = 4**

( அல்லது )

இரத்ததான முகாம் பற்றிய அறிக்கை எழுதுக.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

## பகுதி - III

அ) சான்று தருக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1 ) தாப்பிசைப் பொருள்கோள்

அ) அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்.

ஆ) பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

இ) இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

ஈ ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

2 ) தோன்றல் விகாரம்

அ) இருப்பாணி

ஆ) மரவேர்

இ) தமிழ்ப்பாடம்

ஈ) பொன் வளையல்

3 ) கலித்தளை

அ) தாமரைப்பூ குளத்தினிலே

ஆ) செந்தாமரைக் குளத்தினிலே

இ) வானில்வளர் திங்களன்ன

ஈ) யாதானும் நாடாமல்

4 ) நிரல்நிறையணி

அ) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

இ) கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு

ஈ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

5 ) கூழை மோனை

அ) தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

ஆ) இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இ) கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

ஈ ) ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

ஆ) நிரப்புக. ( மூன்று மட்டும் ) **3 x 1 = 3**

1 ) அடிதோறும் ஆறு சீர்களைப் பெற்று வருவது ________ .

அ) சிந்தடி

ஆ) நெடிலடி

இ) நேரடி

ஈ) கழிநெடிலடி

2 ) தொடை ________ வகைப்படும்.

அ) நான்கு

ஆ) இரண்டு

இ) மூன்று

ஈ ) எட்டு

3 ) புலவன் தான் கருதியதை நேரடியாகச் சொல்லாமல் அதனோடு தொடர்புடையவற்றைச் சொல்லி விளங்க வைப்பது ________.

அ) நிரல்நிறை அணி

ஆ) இல்பொருள் உவமையணி

இ) பிறிது மொழிதல் அணி

ஈ ) ஏகதேச உருவக அணி

4 ) நான்குசீர்களுடைய ஓரடியில் பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகியன வரத்தொடுப்பது ________ .

ஆ) அடி இயைபுத்தொடை

ஆ) தொடை விகற்பம்

இ) அளபெடைத்தொடை

ஈ ) முரண்தொடை

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

5 ) அளவடிக்கு ______________ என்னும் வேறுபெயருண்டு.

அ) குறளடி

அ) சிந்தடி

இ) நேரடி

ஈ) நெடிலடி

இ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1 ) பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

( இப்பாடலில் இடம் பெற்றுள்ள அணியைக் கூறுக )

அ) உவமையணி

ஆ) நிரல்நிறையணி

இ) உருவக அணி

ஈ ) ஏகதேச உருவக அணி

2 ) எண்ணித் துணிக ( தளை கூறுக )

அ) நேரொன்றாசிரியத்தளை

ஆ) இயற்சீர்வெண்டளை

இ) நிரையொன்றாசிரியத்தளை

ஈ ) வெண்சீர்வெண்டளை

3 ) வெண்தாமரை ( அசை பிரித்து எழுதுக )

அ) நேர் / நிரை / நேர்

ஆ) நேர் / நிரை / நிரை

இ) நேர் / நேர் / நேர்

ஈ ) நிரை / நிரை / நிரை

4 ) ஆறு + பாலம் ( சேர்த்து எழுதுக )

அ) ஆறுபாலம்

ஆ) ஆற்றுபாலம்

இ ) ஆற்றுப்பாலம்

ஈ ) ஆறுப்பாலம்



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

5 ) தொல்காப்பியர்  ( அசை பிரித்து வாய்ப்பாடு தருக )

அ) தேமாங்காய்

ஆ) தேமாங்கனி

இ) கருவிளங்காய்

ஈ ) கருவிளங்கனி

ஈ) இலக்கணக்குறிப்பு தருக.  ( மூன்று மட்டும் )  3 x 1 = 3

1 ) கார்காலம்

அ) தேமா

ஆ) புளிமா

இ) கருவிளம்

ஈ ) கூவிளம்

2 ) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

அ) உவமையணி

ஆ) இல்பொருள் உவமையணி

இ) பிறிது மொழிதல் அணி

ஈ ) வேற்றுமையணி

3 ) நேர்பு

அ) நாள்

ஆ) மலர்

இ) காசு

ஈ ) பிறப்பு

4 ) நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

அ) தாப்பிசைப் பொருள்கோள்

ஆ) ஆற்றுநீர்ப் பொருள்கொள்

இ) விற்பூட்டுப் பொருள்கோள்

ஈ ) கொண்டுகூட்டுப் பொருள்கொள்



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

5 ) கண்ணா

அ) மாச்சீர்

ஆ) விளச்சீர்

இ) காய்ச்சீர்

ஈ) கனிச்சீர்

உ) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1 ) அ) உலகில் இல்லாத ஒன்றை உவமையாக்கிக் கூறுவது ஏகதேச உருவக அணி.

ஆ ) உலகில் இல்லாத ஒன்றை உவமையாக்கிக் கூறுவது நிரல்நிறையணி.

இ ) உலகில் இல்லாத ஒன்றை உவமையாக்கிக் கூறுவது வேற்றுமையணி.

ஈ ) உலகில் இல்லாத ஒன்றை உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமை அணி.

2 ) அ) இரண்டடிகளிலும் அளபெடுத்து வருவது அடியளபெடைத் தொடை எனப்படும்.

ஆ) இரண்டடிகளிலும் அளபெடுத்து வருவது அடிஇயைபுத்தொடை எனப்படும்.

இ) இரண்டடிகளிலும் அளபெடுத்து வருவது அடிமுரண்தொடை எனப்படும்.

ஈ ) இரண்டடிகளிலும் அளபெடுத்து வருவது அடியெதுகைத்தொடை எனப்படும்.

3 ) அ) கன்று + ஆ என்பது கற்றா எனப் புணரும்.

ஆ) கன்று + ஆ என்பது கன்றா எனப் புணரும்.

இ) கன்று + ஆ என்பது கந்றா எனப் புணரும்.

ஈ ) கன்று + ஆ என்பது கறா எனப் புணரும்.

4 ) அ) முற்று 1 , 2 , 3 , 4 சீர்களில் வரும்.

ஆ) முற்று 1 , 2 , 3 சீர்களில் வரும்.

இ) முற்று 1 , 2 , 4 சீர்களில் வரும்.

ஈ) முற்று 1 , 3 , 4 சீர்களில் வரும்.

5 ) அ) அணியில்லாத கவிதை சிறப்பான கவிதை.

ஆ) அணியில்லாத கவிதை தெளிவான கவிதை.

இ) அணியில்லாத கவிதை புதுமையான கவிதை.

ஈ ) அணியில்லாத கவிதை பணியில்லாத வனிதை.



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

## பகுதி - IV

அ) பின்வரும் பத்தியைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.

தமிழகத்து உணவு, தொன்றுதொட்டு மருத்துவமுறையில் சமைக்கப்படுகிறது. வெப்ப நாடான நமது நாட்டுச் சமையலுக்குப் புழுங்கலரிசியே ஏற்றது.அன்றாடச் சமையலில் கூட்டுவன-வற்றுள் மஞ்சள்,நெஞ்சிலுள்ள சளியை நீக்கும்.கொத்துமல்லி, பித்தத்தைப் போக்கும். சீரகம் வயிற்றுச்சூட்டைத் தணிக்கும்.மிளகு,தொண்டைக் கட்டைத் தொலைக்கும்.பூண்டு வளியகற்றி வயிற்று அலைச்சலை நீக்கிப் பசியை மிகுக்கும்.வெங்காயம் குளிர்ச்சி உண்டாக்கிக் குருதியைத் தூய்மைப்படுத்தும்.

**வினாக்கள்** **5 x 1 = 5**

1 ) தமிழ்நாடு

அ) அதிகமாக மழை பொழியும் நாடு

ஆ) குளிர் பிரதேசம்

இ) வெப்பநாடு

ஈ ) பாலைவனம்

2 ) குளிர்ச்சி உண்டாக்கிக் குருதியைத் தூய்மைப்படுத்துவது

அ) வெங்காயம்

ஆ) அப்பளம்

இ ) கருவாடு

ஈ ) முந்திரிப்பருப்பு

3 ) கொத்துமல்லி

அ) பித்தத்தைப் போக்கும்

ஆ) வளியகற்றும்

இ) கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும்

ஈ ) உடலுக்கு வலுவூட்டும்

4 ) நெஞ்சிலுள்ள சளியை நீக்குவது

அ) ஊறுகாய்

ஆ) வாழைக்காய்ச் சீவல்

இ ) மஞ்சள்

ஈ ) இஞ்சி



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

5 ) வயிற்றுச்சூட்டைத் தணிப்பது

அ) மிளகு

ஆ) சீரகம்

இ) கீரை

ஈ ) தேங்காய்

ஆ) சிறையில் வள்ளியம்மைக்குக் கல்லும் மண்ணும் கலந்த உணவே தரப்பட்டது. இதனால் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டார். கடுமையான காய்ச்சலுக்கு ஆட்பட்ட அவருக்குப் போதிய மருத்துவம் அளிக்கப்படவில்லை.சிறைச்சாலையில் நோயுடன் உயிருக்குப் போராடிய நிலையில் விடுதலை செய்யப்பட்டார்.உடல்நலம் குன்றிய நிலையில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட வள்ளியம்மை படுத்த படுக்கையாக இருந்தார். இதனை அறிந்த காந்தியடிகள் வள்ளியம்மையைக் காண வந்தார். காய்ச்சல் காரணமாக உடல் மெலிந்து நைந்து கிடந்த வள்ளியம்மையின் நிலை கண்டு கண்கலங்கி நின்றார்.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

1 ) வள்ளியம்மையின் நிலை கண்டு கண் கலங்கியவர்

அ) காமராசர்

ஆ) காந்தியடிகள்

இ) பாரதிதாசன்

ஈ ) கோபால கிருஷ்ண கோகலே

2 ) சிறையில் வள்ளியம்மைக்கு

அ) கல்லும்,மண்ணும் கலந்த உணவு வழங்கப்பட்டது

ஆ) பாலும்,பழமும் வழங்கப்பட்டது

இ ) மூன்று வேளை உணவு வழங்கப்பட்டது

ஈ ) உணவு வழங்கப்படவில்லை

3 ) சிறையில் வள்ளியம்மைக்கு ஏற்பட்ட நோய்

அ) மஞ்சள் காமாலை

ஆ) கடுமையான காய்ச்சல்

இ) மாரடைப்பு

ஈ ) புற்று நோய்



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

4 ) விடுதலை செய்யப்பட்ட வள்ளியம்மை, வீட்டில்

அ) படுத்த படுக்கையாக இருந்தார்

ஆ) மருந்து உண்ண மறுத்தார்

இ) போதிய மருத்துவ வசதி இன்றி வேதனையடைந்தார்

ஈ) உடல் ஆரோக்கியத்துடன் இருந்தார்

5 ) குன்றிய - என்னும் சொல்லின் பொருள்

அ) நிறைந்த

ஆ) மிகுந்த

இ) குறைந்த

ஈ ) கூடிய

இ ) பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து, தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.

பழந்தமிழ் கற்றல் இன்பம்
பலநாடு சுற்றல் இன்பம்
எழுந்திடு புதுமை தன்னை
ஏற்றிடல் வாழ்வுக் கின்பம்
குழந்தையின் தளிர்க்கை பட்ட
கூழினை உண்ண இன்பம்
இழந்ததைப் பெறுதல் இன்பம்
இசைபட வாழ்தல் இன்பம்!

<u>வினாக்கள்</u> **4 x 1 = 4**

1 ) எதனைக் கற்றல் இன்பம் ?

அ) பழமொழிகள்

ஆ) அறிவியல் கட்டுரைகள்

இ) சிலம்பாட்டம்

ஈ ) பழந்தமிழ் இலக்கியங்கள்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

2 ) வாழ்வுக்கு இன்பம் தருவது எது ?

அ) புதுமையை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் பெறுதல்

ஆ) புதுமையை ஏற்க மறுத்தல்

இ) பழைமையை விரும்புதல்

ஈ ) ஆடம்பர வாழ்க்கை மேற்கொள்ளுதல்

3 ) தளிர்க்கை - என்பதன் பொருள் என்ன ?

அ) உறுதியான கை

ஆ) திடமான கை

இ) பிஞ்சுக்கை

ஈ ) தும்பிக்கை

4 ) இப்பாடலின் ஆசிரியர் யார் ?

அ) கண்ணதாசன்

ஆ) இராமலிங்கனார்

இ) பாரதிதாசன்

ஈ ) சுரதா

ஈ ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக. **2 x 5 = 10**

1 ) காமராசர், பிரதமர்களை உருவாக்கிய நிகழ்வுகளை விவரிக்க.

2 ) ஏறு தழுவுதல் பற்றி எழுதுக.

3 ) தண்ணீரும் மருந்தே விளக்குக.

4 ) தமிழர் திருநாளின் சிறப்புகளை விவரிக்க.

5 ) உண்ண வேண்டிய முறையை விளக்குக.

உ ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக. **2 x 4 = 8**

1 ) மீனவர் பாடல்வழி அவர்தம் வாழ்க்கையைப் பற்றி விவரிக்க.

2 ) சான்றாண்மையின் பயன்களை விளக்குக.

3 ) தீவினை என்பது யாது ?

4 ) சிறு குறிப்பு தருக. அ) உமர்கய்யாம் ஆ) கவிமணி

ஊ) பின்வரும் துணைப்பாட வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விரிவான விடை தருக.

1 ) கீரைகள் மூலிகைகளே என்பதை விளக்குக. **1 x 8 = 8**

2 ) கிளி எவ்வாறு விடுதலை அடைந்தது ?

3 ) முருகனின் நேர்மையை விளக்கி எழுதுக.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers